இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 306 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 01 – வெள்ளிக்கிழமை 16 ஜூன் 2023 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 306 : Thiruvalluvar Year - 2054 - Aani 01 - Firday 16 June 2023 - Madurai 8 Pages ₹ 5.00

## விசாரணை அமைப்புகளை வைத்து உருட்டல், மிரட்டல்களுக்கெல்லாம் பயப்படுபவர்கள் அல்ல நாங்கள்:

# அறிவிக்கப்படாத எமர்ஜென்சியா நிலவுகிறது?

## பா.ஜ.க. அரசின் அரசியல் பழிவாங்கும் செயலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**சென்னை, ஜூன் 16-**

**தி.மு.க.காரர்களைச் சீண்டிப் பார்க்க வேண்டாம். எங்களுக்கும் எல்லா அரசியலும் தெரியும். உருட்டல், மிரட்டல்களுக்கு எல்லாம் பயப்படுபவர்கள் இல்லை தி.மு.க. காரர்கள்! இங்கே அறிவிக்கப்படாத எமர்ஜென்சியா நிலவுகிறது என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பா.ஜ.க. அரசின் பழிவாங்கும் செயலுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.06.2023) தமது சமூக வலைதளப் பக்கங்களில் வெளியிட்டுள்ள காணொளிப் பதிவின் விவரம் வருமாறு:-

எல்லாருக்கும் வணக்கம்!

வழக்கமாக நான் ‘உங்களில் ஒருவன் பதில்கள்’ மூலமாக உங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன். ஆனால், இப்போது இந்த வீடியோ மூலமாக இன்னொரு முக்கியமான விஷயம் பற்றிப் பேசப் போகிறேன்.

**செந்தில் பாலாஜி உயிருக்கு ஆபத்து ஏற்படும் வகையில் செயல்பட்ட அமலாக்கத்துறை!**

அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு அமலாக்கத்துறை மூலமாக கொடுக்கப்படுகிற அநியாயமான தொல்லைகள் எல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். இது அப்பட்டமான அரசியல் பழிவாங்கும்



செயல் என்பதில் யாருக்கும் கொஞ்சமும் சந்தேகமில்லை!

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் உள்ள பழைய புகாரை வைத்து, 18 மணி நேரம் அடைத்து வைத்து, மன அழுத்தம் கொடுத்து, மனரீதியாகவும் – உடல் ரீதியாகவும் பலவீனப்படுத்தி, உயிருக்கு ஆபத்து ஏற்படும் வகையில் இதயநோயை உருவாக்கி இருக்கிறார்கள் என்றால், இதைவிட அப்பட்டமான அரசியல் பழிவாங்கல் இருக்க முடியுமா?

செந்தில் பாலாஜி மேல் புகார் இருக்கும் என்றால், அது தொடர்பாக நீதிமன்றத் தீர்ப்பு இருக்கும் என்றால், அவரை அழைத்து விசாரணை நடத்துவதை நான் தவறு என்று சொல்லவில்லை. ஓடி ஒளியக் கூடிய அளவுக்கு அவர் சாதாரணமானவர் இல்லை! அவர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர். அதுவும் 5 முறை சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார்.

**அமலாக்கத்துறை மூலம் அரசியல் செய்கிறது பா.ஜ.க.!**

அதுவும் இரண்டாவது முறையாக அமைச்சராக இருக்கிறார். நாள்தோறும் பொதுநிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவர். சொல்லி இருந்தார். அதற்குப் பிறகும் 18 மணி நேரமாக அடைத்து வைத்துள்ளனர். யாரையும் சந்திக்க அனுமதி இல்லை. இறுதியாக அவருக்கு உடல்நலம் முழுமையாக பாதிக்கப்பட்டு இதயவலி அதிகமான பின்னர்தான், அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அதிலும் அலட்சியம் காட்டி இருந்தார்கள் என்றால், அது அவருடைய உயிருக்கே ஆபத்தாகி இருக்கும்! இப்படி ஒரு விசாரணையை மேற்கொள்ளும் அளவுக்கு அப்படி என்ன அவசரம்? அறிவிக்கப்படாத எமர்ஜென்சியில் நாடு இருக்கிறதா? அப்படித்தான் இருக்கிறது, அமலாக்கத் துறையின் நடவடிக்கை.

## பா.ஜ.க.வின் காலடியில் கிடக்கும் - பாதம் தாங்கி பழனிசாமி செந்தில் பாலாஜி பற்றி குறை கூறத் தகுதி உண்டா?

அப்படிப்பட்டவரை, ஏதோ தீவிரவாதியைப் போல அடைத்து வைத்து விசாரிக்க என்ன அவசியம் இருக்கிறது?

அமலாக்கத்துறை அதிகாரிகள் வந்த போது, முழு ஒத்துழைப்பு தந்தார். எந்த ஆவணங்களை எடுத்திருந்தாலும், அது தொடர்பாக விளக்கமளிக்கத் தயார் என்று

எளிமையாகச் சொல்ல வேண்டும் என்றால், பா.ஜ.க. தலைமை, அமலாக்கத்துறை மூலமாக அவர்களது அரசியலைச் செய்ய நினைக்கிறது. மக்களைச் சந்தித்து அரசியல் செய்ய பா.ஜ.க. தயாராக இல்லை. பா.ஜ.க.வை நம்ப மக்களும் தயாராக இல்லை. மக்களுக்கான அரசியலை செய்தால்தான் மக்கள் பா.ஜ.க.வை நம்புவார்கள். பா.ஜ.க.வின் அரசியலே மக்கள் விரோத அரசியல் தான்!

**ஜனநாயக விரோத பாணியை தொடர்ந்து பின்பற்றும் பா.ஜ.க.!**

கருத்தியல் ரீதியாக, அரசியல்ரீதியாக, தேர்தல் களத்தில் எதிர்கொள்ள முடியாதவர்களை வருமானவரித் துறை, அமலாக்கத்துறை, சி.பி.ஐ. என விசாரணை அமைப்புகளை வைத்து மிரட்டுவது பா.ஜ.க.வின் பாணி! அதுதான் அவர்களுக்குத் தெரிந்த ஒரே பாணி! இந்த ஜனநாயக விரோத பாணியைத்தான் இந்தியா முழுமைக்கும் அவர்கள் பின்பற்றி வருகின்றனர். ஒரே ஸ்கிரிப்ட்டைத்தான் வேறு வேறு மாநிலங்களில் டப்பிங் செய்து வருகிறார்கள்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - ஜூன் 20 அன்று நடைபெறுகிறது!

# திருவாரூர் ‘கலைஞர் கோட்டம்’ - பீகார் முதல்வர் நிதிஷ்குமார் திறந்து வைக்கிறார்!

## ‘முத்துவேலர் நூலகத்தை’ - பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் திறந்து வைக்கிறார்!

**திருவாரூர், ஜூன் 16-**

**திருவாரூரில் ‘கலைஞர் கோட்டம்’ திறப்பு விழா, வருகிற ஜூன் 20 அன்று மிகப் பிரம்மாண்டமாக நடைபெறுகிறது.**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமையேற்று, கலைஞர் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கிறார்.**

**இந்த எழில்மிகு விழாவில், பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் கலந்துகொண்டு, “கலைஞர் கோட்டத்தை” திறந்து வைக்கிறார்.**

**பீகார் மாநில துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் அவர்கள், முத்துவேலர் நூலகத்தைத் திறந்து வைக்கிறார்.**

**விழாவில் - கவியரங்கம், பட்டிமன்றம், பாட்டரங்கம், பாராட்டரங்கம் என பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

**இந்த உணர்ச்சிமிகு விழாவில், தமிழ்கூறு நல்லுலகெங்கணுமிருந்து மக்கள் திரண்டு வந்து பங்கேற்றுச் சிறப்பிக்கிறார்கள்.**

பல நூற்றாண்டுகளாக உரிமை மறுக்கப்பட்டிருந்த ஒடுக்குமுறைக்கு ஆளாகியிருந்த இனத்தின் மீட்சிக்கு ஓயாது உழைத்து, உரிமைகள் பலவற்றை மீட்டுத் தந்த மகத்தான தலைவர் – தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழா எழுச்சியுடன் தொடங்கியுள்ளது.

நீதிக்கட்சியின் முன்னோடிகள் தொடங்கி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் வழியில் வளர்ந்த திராவிட இயக்கத்தின் நூற்றாண்டு வரலாற்றில், முக்கால் நூற்றாண்டுகாலத்தைக் கடந்த பங்களிப்புக்குரியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். 95 வயது வரை வாழ்ந்த அவர், 80 ஆண்டுகால பொது வாழ்க்கையைக் கொண்ட பெருமைக்குரியவர்.

14 வயதில் பள்ளி மாணவராகத் தமிழ்க் கொடி ஏந்தி, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ஒலித்த அவரது போர்க்குரல், 80 வயது கடந்தும் சளைக்காமல் ஒலித்தது. திராவிட இயக்கத்தின் கொள்கை முழக்கங்களை படைப்புகள் வழியாகப் பாமர மக்களின் நெஞ்சிலும் பதியச் செய்தவர் அவர்.

‘சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்’ என்பதை ஆட்சி நிர்வாகத்தின் இலக்கணமாகக் கொண்டு செயல்பட்டவர் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டின் முதலமைச்சராக 5 முறை பொறுப்பேற்ற பெருமைக்குரியவர். 19 ஆண்டுகால ஆட்சியில், இந்தியாவுக்கே முன்னோடியான பல திட்டங்க ளைத் தந்தவர். அவர் வழங்கிய சமூகநீதிக்கான இடஒதுக்கீட்டின் காரணமாக கல்வியும் வேலைவாய்ப்பும் பெற்ற குடும்பத்தினர் ஏராளம். இன்று நாம் காணும் நவீனத் தமிழ்நாட்டை கட்டமைத்த சிற்பிதான் முத்தமிழறிஞர் கலைஞர்.



**வாழ்நாளின் இறுதிவரை சளைக்காத போராளி!**

தான் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்தவர். களம் கண்ட 13 தேர்தல்களிலும் தோல்வியே காணாத வெற்றிச் சாதனையாளர்.

50 ஆண்டுகாலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பொறுப்பை சுமந்து, அரை நூற்றாண்டு காலம் தமிழ்நாட்டின் அரசியலைத் தீர்மானித்தவர். மொழியையும் இனத்தையும் காப்பதற்காகப் பல முறை சிறை கண்டவர். தனிமைச் சிறைக்கும் கலங்காதவர். வாழ்நாளின் இறுதிவரை சளைக்காத போராளி.

‘உடன்பிறப்பே’ எனும் ஒற்றைச் சொல்லால் ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் இதயத்தில் இடம்பிடித்தவர் தமிழினத் தலைவர் கலைஞர். திருக்குவளை எனும் சிற்றூரில் பிறந்து, திருவாரூர் எனும் சிறு நகரத்தில் பயின்று, இளம் வயதிலேயே கொள்கை உணர்வுடன் வளர்ந்து, பன்முக ஆற்றலுடன் அனைத்துத் தளங்களிலும் அந்தக் கொள்கையை வளர்த்து, எவ்விதப் பின்னணியும் இல்லாத நிலையிலும், தன் அயராத உழைப்பால், கலை இலக்கியத்துறையிலும், பொது வாழ்விலும் உரிய இடத்தைப் பிடித்து, ஆட்சி செய்வதற்கு கிடைத்த வாய்ப்புகளில் எல்லாம் தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டி, தமிழினத்திற்குப் பெருமை சேர்த்தவர் நம் தலைவர் கலைஞர். தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பெரும் புகழுக்கு மேலும் புகழ் சேர்க்கும் வண்ணம், அவர்கள் பிறந்த திருவாரூரில் அழகிய ‘கோட்டம்’ ஒன்றை நிறுவிட கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தீர்மானித்தார்.

அவரது வழிகாட்டுதலில் மிகுந்த எழிலோடு திருவாரூரில் உருவாகியுள்ள “கலைஞர் கோட்டத்தின்” திறப்பு விழா 20.6.2023 - செவ்வாய்க் கிழமை அன்று காலை 10.00 மணி அளவில் திருவாரூர் சகோதரிகளின் மங்கள இசையுடன் தொடங்குகிறது.

**கவியரங்கம் – பட்டிமன்றம் பாராட்டரங்கம்!**

அதனைத் தொடர்ந்து - கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில் கவியரங்கம் நடைபெறுகிறது.

இதில் - கவிஞர்கள் கபிலன், பா.விஜய், திருமதி ஆண்டாள் பிரியதர்ஷினி, தஞ்சை இனியன் ஆகியோர் கவிபாடுகின்றனர்.

கவியரங்கை அடுத்து - தமிழறிஞர் சாலமன் பாப்பையா அவர்களை நடுவராகக் கொண்டு, பட்டிமன்றம் நடைபெறுகிறது.

“மக்கள் மனதைப் பெரிதும் கவர்ந்தது முத்தமிழறிஞர் கலைஞரின் பேச்சே! எழுத்தே!” எனும் தலைப்பிலான இப்பட்டிமன்றத்தில் - “பேச்சே!” எனும் தலைப்பில் திருவாரூர் புலவர் சண்முக வடிவேல், திருமதி கவிதா ஜவகர், எஸ். ராஜா ஆகியோரும் -

“எழுத்தே!” எனும் தலைப்பில், புலவர் எம். ராமலிங்கம், இரா. மாது, திருமதி பாரதி பாஸ்கர் ஆகியோரும் வாதிடுகின்றனர்.

பட்டிமன்றத்தை அடுத்து - கலைமாமணி மாலதி லஷ்மன் குழுவினரின் பாட்டரங்கம் நடைபெறுகிறது.

பாட்டரங்கினைத் தொடர்ந்து, விழாவில் - தயாளு அம்மாள் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் மருத்துவர் மோகன் காமேஸ்வரன் வரவேற்புரையாற்றுகிறார்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் சிலையைத் திறந்து வைத்து, விழாத் தலைமையுரையாற்றுகிறார்.

“கலைஞர் கோட்டத்தை” பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள், திறந்து வைத்து விழாச் சிறப்புரையாற்றுகிறார்.

பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் அவர்கள், “முத்துவேலர் நூலகத்தை” திறந்து வைக்கிறார்.

தயாளு அம்மாள் அறக்கட்டளையின் அறங்காவலர் சம்பத்குமார் நன்றியுரையாற்றுகிறார்.

“இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் கலந்துகொள்கிறார்கள். தமிழ்கூறு நல்லுலகினர் அனைவரும் விழாவிற்கு வருகை புரிந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.” – என தயாளு அம்மாள் ‘அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் மருத்துவர் மோகன் காமேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.’